**<u>நான் நினைப்பதை பார்க்கிலும்</u>**

நான் நினைப்பதை பார்க்கிலும்
எதிர்ப்பார்ப்பதை பார்க்கிலும்
நான் ஜெபிப்பதை பார்க்கிலும்
அவர் நினைவுகள் மேலானது

அவர் சொல்வதும் மேலானது
அவர் செய்வதும் மேலானது
கர்த்தர் சொல்வதும் மேலானது
அவர் செய்வதும் மேலானது

யார் என்ன நினைத்தாலும்
கர்த்தரின் நினைவுகள் நிலை நிற்கும்
யார் என்னை தடுத்தாலும்
கர்த்தரின் கரம் என்னை கரை சேர்க்கும்

எத்தனை கதவுகள் அடைத்தாலும்
அதை விட அதிகமாய் திறந்திடுவார்
எத்தனைமுறை நான் தோற்றாலும்
அதை விட அதிகமாய் ஜெயம் தருவார்